

வல்வை

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளின்

# ஆனந்த அருளாட்சி

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கையின் ஓசையிலே உலகமெல்லாம் படைத்த மாரி!
கடைக்கண் பார்வையிலே உலகாளும் தேவி!
இடுக்கண் வராமல் ஈஸ்வரியாள் காத்தருள்வாய்!
அடுக்கடுக்காய் வரம்தருவாய் ஆல்போல் தழைத்திடவே!

ஒளியருவி

டிஜிற்றல் கலர் லாப்

கிளை:
செல்லப்பிள்ளையார் கப்பம்
நெல்லியடி.

யாழ் வீதி,
வல்வெட்டி.

T.P:
021 226 4006

நம்பினார் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரணடைந்தோம் அருளுடை வரம் பெற்றோம்
வம்புகள் வஞ்சனைகள் வேரறுத்த தேவீ !
ஓம் சக்தியென்று ஓயாமல் உரைப்பதற்கு உறுதிகொண்டோம் தாயே

↓

பானு ஸ்ரோர்ஸ்

யாழ் வீதி. வல்வெட்டித்துறை.

பம்பை உடுக்கையிலே பறந்து வரும் பத்தினியே!
கரகம் எடுக்கையிலே கடுகதியில் வருபவளே!
தீமிதித்து, அடியளித்து நேர்த்தி செய்தோமம்மா!
என்றும் உன்னருகில் நாமிருக்க வரமருள்வாய் அம்மா!

வரதலக்சுமி உணவகம்

அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
T.P:
021 226 4642

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஓம் சக்தி

*வல்வை அருள்மிகு*

*ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுருவும்,*

*அகில உலக சைவக்குருமார் சம்மேளன*

*சிவாச்சார்ய பீடாதிபதியுமாகிய*

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர்** J.P. **அவர்களின்**

# ஆசிச் செய்தி

விகிர்தி வருட அம்பிகையின் பிரம்மோற்சவத்தில் இரதோற்சவ தினத்தன்று ஸ்ரீவாணி அச்சக உரிமையாளர் திரு. சி. சிவகுமார் அவர்கள் ஆறாவது வருடமாக வெளியிடும் "அம்பாளின் ஆனந்த அருளாட்சி" என்ற நூல் அனைவருக்கும் பயன்படக் கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நூலானது இவ்வூர் மக்களுக்கு மட்டுமல்ல இலங்கைவாழ் அடியவர்களுக்கும் புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்கின்ற இறைபக்தர்கள் அனைவருக்கும் பயன்படக் கூடியதென்பது மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு விடயமாகும்.

"முயற்சி திருவினை ஆக்கும்" என்ற முதுமொழிக்கிணங்க இவரது பணி ஆறு வருடங்கள் அல்ல அறுநூறு வருடங்கள் தொடர எல்லாம்வல்ல அம்பிகையை இறைஞ்சி வேண்டிப் பிரார்த்தித்து, எனது உள்ளார்ந்த நல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

**"சர்வே ஜனகா சுகிணே பவந்து"**

"சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு"
"பிரதிஸ்டாலங்கார சிந்தாந்த ஸாகரம்"
"பிரதிஷ்டா சிரோமணி"
தென்புலோலி புற்றளைச் சித்திவிநாயகர்
தேவஸ்தான தர்மகர்த்தா
**சிவஸ்ரீ**
**சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர்** (J.P.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ❈ பிரார்த்தனை | 01 |
| ❈ குரு வணக்கம் | 05 |
| ❈ ஸ்ரீ சிவன் பாடல் | 06 |
| ❈ ஸ்ரீ சக்தி பாடல் | 07 |
| ❈ முத்துமாரி அம்பிகைக்கு கவிமாலை | 08 |
| ❈ ஸ்ரீ காளி ஸ்தோத்திரம் | 10 |
| ❈ வல்வையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முத்துமாரி அம்பாளுடைய கருணையே கருணை - *தாரணன்* | 13 |
| ❈ அழகு - *வல்வையூர் அப்பாண்ணா* | 16 |
| ❈ அம்பிகையின் அவதாரங்கள், அற்புதங்கள், அனுக்கிரகங்கள் - *மீனாட்சி சுந்தரம்* | 22 |
| ❈ வற்றாப்பளையில் தெய்வீக அதிசயம் | 27 |
| ❈ அன்னையின் அருட்கடாட்சம்... | 29 |


## மாரிதேவி தியானம்

**அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்**
**டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்**
**அநல நயண யுக்மம் ஹரகேயூர பூஷ்யம்**
**அகில புவன மாதா மாரிகாதேவி ஸ்வரூபம்.**

**எங்கும் நிறைந்த அன்னையே!**
**குலுங்க நடனமிடும் முத்துமாரியே!**
**உக்கிர தாண்டவியே! – சிம்மவாஹினியே**
**வலிய விதியையும், கொடிய வினைகளையும் போக்குகின்ற**
**வல்வை ஸ்ரீ முத்துமாரியே! சரணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மாரி அம்மன் துணை

# பிரார்த்தனை

**ஓம் சக்தியே! அசத்தியத்திலிருந்து சத்தியத்திற்கு என்னை அழைத்துச் செல்வாயாக! அஞ்ஞான இருளிலிருந்து மெய்ஞ்ஞான ஒளிக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! மரணத்திலிருந்து மரணமிலாப் பெருநிலைக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! ஓம்**

அம்மா! எவ்வெவ் விசேட தினங்களிலெல்லாம் ஆசாரத்துடன் வந்து வணங்கி உனது பிரசாதங்களாகிய விபூதி, சந்தணம், குங்குமம் அணிந்து, தீர்த்தம் அருந்தும் போதெல்லாம் என்னையறியாத மனச்சாந்தி நிறையப் பெறுகின்றது. உடம்பிலே ஓர் ஆரோக்கிய நிலை புத்துணர்ச்சி தெரிகின்றது. இந்நிலை மட்டும் போதாது ஆத்தாளே! என்றென்றும் உன்னுடன் அன்புநிலை மாறாதிருக்க வரமருள்வாயாக. அகத்தில் உன் அழகுக் காட்சிகள் காண வைப்பாயாக. இதற்கு ஆன்மீக வழியில், வாழ்க்கைமுறையில் இதயசுத்தியான வாழ்வுவாழ்ந்து ஆன்மீக பயணம் பயணிக்கக் கூடிய வல்லமை தருவாயாக. என்றுமுன்னை அடிபணியும் ஆசைதருவாயாக. தினம் தினம் ஆசாரத்துடன் வாழும் நிலை தருவாயாக.

மெய்யர்க்கு மெய்யானவளே! பொய்யர்க்குப் பொய்யானவளே! வித்தகம் புரியும் முத்தமாரித்தாயே! மாய வாழ்வதனைத் தெளியவைக்கும் மங்களரூபினியே! புவனமீன்ற புவனேஸ்வரியே! உன்னால் முடியாத தொன்றுளதோ. இப்பூவுலக ஆசைகளிலிருந்து தெளியும் மனம்தந்து மெய்பொருள் காண்பது அறிவு எனும் நிலைக்கு அடியேனை உயர்த்தி வைப்பாயாக அன்னையே! மகவென்று பார்க்காமல் காத்தவராயனையே கழுமரமேற்றி நெறிப்படுத்திய தர்மம் காக்கும் நாயகியே! அடியேனையும் உன் பிள்ளையாக ஏற்றருள்வாயாக. அடியேனையும் நெறிப்படுத்தி ஒளிதருவாயாக. என்றென்றும் உந்தனது அன்புத் தொடர்பிருக்க வரமருள் வாயாக. எல்லாம் வல்ல தாயே! உன்னுடன் அன்பு பாராட்டத் தடையாக இருக்கும், யாருக்கும் உதவிசெய்ய விருப்பமில்லாத எனது குணங்களைத் திருத்தி அடியேனுக்குப் பரோபகார சிந்தை அருள்வாயாக.

☆☆☆

தாயே! உன்னைப் பற்றிப் பிடித்ததனால் அடியேனை வழி நடாத்துகின்றாய். என்றும், எப்பொழுதும், தனிமையிலும் யாம் செய்யும் செயல்களனைத்தையும், தவறுகளையும், நினைவுகளையும் கண்காணிக்கும் அன்னையே! அடியேன் தவறுகள் செய்யும் போது நீ தந்த தண்டனைகளாலும், கண்டிப்புகளாலும் அடியேனைத் தெளியவைத்தாய் தேவியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அன்னையே! உன்னிடம் சரணடைந்பின்பும் அடியேனிடம் மமதை, அதகடிக்கதைகள், போலிக்கௌரவம், பணத்தின்மீதான கடும் ஆசை, கோபம், அதிகாரதோரணை முதலானவை குறைவடைந்தாலும், சிறு அளவிலேனும் மறைந்திருந்துவிட்டு அப்பப்ப இடையிடையே வெளிக் கிளம்புகின்றன.

அன்னையே! இவையெல்லாம் உன்னுடைய முழுமையான அன்பைப் பெறுவதற்கும் உன்னுடைய காட்சிகளைக் கண்டின்புற்று உன்னுடன் கதைப் பதற்கும் தடையாக இருக்கின்றன என்று அடியேனுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் இக்குணங்களிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்றேன் அன்னையே! பூரணமாக அன்புவழியில் திரும்புவதற்கு என்னுடைய தாவும் மனம் இடையிடையே குழப்பம் விளைவிக்கின்றது தயாபரியே!

முழுமையாக அன்பு, அமைதி தந்து உன் ஒளிகாட்டுவதற்கு நீயே பொறுப்புத் தாயாரே! என்றும் எக்கணமும் உனைத் துதிக்க விருப்பம் கொண்டதனால் - நல் ஆசாரநிலையைக் கடைப்பிடித்து மாமிச உணவு தவிர்த்து தாயாரே! உன் சதாநினைவோடு தயாள குணத்தை வளர்ப் பேனென்று உறுதி எடுத்துக் கொள்கின்றேன் ஆத்தாளே! எச்செயலானாலும் உன்செயலென அறியும் மனம் தருவாய் அன்னையே! மன்னிக்கும் அன்புநிலை தருவாய் அன்னையே! அருட்பெரும் ஜோதியே.

**கலியுக அவதார புருஷர் பகவான் பாபா இப்படிச் சொல்கிறார்:-**

எவரெல்லாம் ஆன்மீகப் பாதையில் செல்ல விரும்புகின்றார்களோ அவர்கள் எல்லாம் அதகடி பண்ணுதல், கோபப்படுதல், மாமிசம் உண்ணுதல், குடிப்பது, இவற்றை விட்டுவிடவேண்டும். வழிபாடு செய்வதும், கோவில் களுக்குச் செல்வதும் மட்டும்தான் ஆன்மீகம் என எண்ணாதீர்கள். அவை ஆன்மீகப் பயிற்சிகள் மட்டுமே. உண்மையான ஆண்மீகம் என்பது தமக்குள் ஆன்மீகக் குணங்களை வளர்த்துக் கொள்வது என்று அர்த்தம். கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்பவற்றுக்கு மட்டும் செல்வது எப்படியென்றால், உலகில் எத்தனையோ மகாநாடுகள், எத்தனையோ தீர்மானங்கள் உருவாகுகின்றன. ஆனால் மகாநாடு முடிந்ததும் பங்கேற்றவர்கள் அந்த மகாநாடு சம்பந்தப்பட்ட பேப்பர்களை அலட்சியமாக கிழித்து எறிகிறார்கள். நாம் அப்படி நடந்து கொள்ளக் கூடாது. விதிமுறைகளுக்கு பணியாமல் இருக்கக்கூடாது. ஆன்மீக நற்குணங்களை வளர்த்துக்கொண்டு வருகையில் தன்னையறியும் சக்தி கிடைக்கப்பெறும். பிறந்து பிறந்து இறந்துகொண்டிருக்கும் மாயம் விளங்கப்பெறும். இறைவன் ஒருவனே! நித்தியம், பேரொளி என்றுமுள்ள பொருள் - அவனைப் பற்றிப்பிடித்தால் நாமும் நித்தியமாகலாம் என்பது தெரியவரும். எமக்குள்ளே உறங்குநிலையில் இருக்கும் இறைசக்தி மிளிரத்தொடங்குவதை உணர்ந்துகொள்வீர்கள். எக்கணமும் இறைவனோடு உபவாசம் புரிகின்றோம் என்ற அன்பு நிலை கிடைக்கப்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குரு வணக்கம்

என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமை யறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
ஆதியந்தமில்லையென்றான் எங்கள் குருநாதன்
அதுவே நீ யென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
ஜோதிமயம் என்று சொன்னான் எங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென்றான் எங்கள் குருநாதன்
சாதி சமயமில்லாதான் எங்கள் குருநாதன்
தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
வாதியருங் காணவொண்ணான் எங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தான் எங்கள் குருநாதன்.

## கணேச சரணம்

அரஹர சிவகத கணபதி சரணம்
அடியவர் வினைகெட அருள்பவ சரணம்
நினைபவர் பவமற நினைபவ சரணம்
நெடியவன் விழிதரு நெடியவ சரணம்
வலவையை மருவிய புயதர சரணம்
வடிவினி லுயரிய பெரியவ சரணம்
முறைதெரி மறையவ ரிறையவ சரணம்
முடியடி தெரிவரு முதியவ சரணம்

உனைத்தேடி உலகெல்லாம் துதிபாடுதே - இன்பம்
தனைத்தந்து எமைக்காக்கும் - கணநாதனே
நிலையாமை நித்யம் என்பதை நெஞ்சம் காணா
நிலையின்றி இங்குண்டு நிலைகொள் என்நெஞ்சில் (உனைத்)
உனையெண்ணி எதுசெய்ய முனைகின்ற போதும்
வினைமுற்றுப் பெறுமென்ற நினைவுண்டு நெஞ்சில் (உனைத்)
இனியேனும் எமைக்காக்கும் மனங்கொண்டு விக்னம்
இனியேதும் இல்லாது அருள்வாய் விக்னேசா (உனைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவன் பாடல்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே.

குற்றம் நீ குணங்கள்நீ கூடலாவ வாயிலாய்
சுற்றம் நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதி நீ
கற்றநூற் கருத்தும்நீ யருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே.

கோலமாய நீள்மதிற் கூடல்ஆல வாயிலாய்
பாலனாய தொண்டுசெய்து பண்டுமின்றும் உன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே.

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத்திகழ் தருபரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்நின்று தங்கணால்
தாமேகாணா வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போடு மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சக்தி பாடல்

ரகாம்: ராகமாலிகை தாளம்: ஆதி

பல்லவி

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வா யம்மா! (கற்பக)

அனுபல்லவி

பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்கார கோயில் கொண்ட (கற்பக)

சரணம்

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌன மம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளு மம்மா! (கற்பக)

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமாஉனை நம்பினே னம்மா (கற்பக)

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீஸ்வரி மாயே வாராயிது தருணம்
பாகேஸ்ரீ தாயே பார்வதியே - இந்த
லோகேஸ்வரி நீயே உலகினில் துணையம்மா (கற்பக)

அஞ்சன மையிடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம்
தஞ்சம்என அடைந்தேன் தாயே உன் சேய்நான்
ரஞ்ஜனியே ரட்சிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா...! (கற்பக)

---

அடித்துத் திருத்துகின் றாளை - அண்டி
"அம்மா பொறுத்திடு வா" யென்று தாளைப்
பிடித்துக்கொண் டால்பிழைப் புண்டு - நாம்
பேரின்பம் பெற்றிட லாம்ஒளி கண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துமாரி அம்பிகைக்குக் கவிமாலை

எல்லையயலாம் கோடியாக் கரைவிட்டே தான்விரும்பி வந்த இடமதுவே,
வல்வைக் கடலலை தாலாட்டு மோரத்தில் வஞ்சியவளின் அருளாட்சி
எல்லையிலாப் பேரருளெங்கும் அருளொளிவீசி ஏணிபோல் ஏற்றம்தந்தாள்
முளுவதும் முத்து மாரியம்மனின் அருளாட்சியென முற்றுமுணர்ந்ததனால்
வல்வையின் இல்லங்களும் உள்ளங்களும் வானுயர உயர்ந்தனவே...
சொல்லமுடியாச் சோதியுள் தனையிழந்தோர் அன்னையின் மைந்தர்களே
துள்ளி விளையாடும் சக்தி முத்துமாரியின் பாதங்கள் சரணங்களேயென
கள்ளமில்லா அன்பர்கள் காத்துக்கிடந்தனர் அன்னையின் தொண்டுசெய்யவே!
அல்லும் பகலும் அன்னையவள், அன்னநடை பயிலும்
வில்லு மண்டபம்தனை விரைந்து சுந்தரமா யமைத்தனரே!
கல்மனமும் கரைந்துருகும் கவின்பெறு காட்சியின்று - நெஞ்சை
அள்ளும் தேவியவள் தேரேறி வருகின்ற திருக்காட்சியை
நில்லென்று பார்த்திழுக்கும் மனம்மேவி நீண்ட வடம் பிடித்தனரே.

## உடுக்கையொலியில் ஆத்தாள் ஓடிவரும் பாடல்

பூஜை நடக்குதம்மா முத்துமாரியம்மா
உந்தன் புதுமையுள்ள ஆலயத்தில் மாரிதேவியம்மா - அம்மா
கூப்பிட்டழைத்தேனம்மா முத்துமாரியம்மா
நீயும் குதித்தோடி வாவேனம்மா மாரிதேவியம்மா - அம்மா
வருந்தியழைத்தேனம்மா முத்துமாரியம்மா
உந்தன் வண்ணமுகம் காண்பதற்கு மாரிதேவியம்மா - அம்மா
ஆசை யெல்லாம் துறந்தேனம்மா முத்துமாரியம்மா
உந்தன் அன்பொன்றே வேண்டுமம்மா மாரிதேவியம்மா - அம்மா
எட்டென்றால் இரண்டறியேன் முத்துமாரியம்மா
ஏழையம்மா உன்னடிமை மாரிதேவியம்மா - அம்மா
பத்தென்றால் ஒன்றறியேன் முத்துமாரியம்மா
பாலனம்மா உன்னடிமை மாரிதேவியம்மா - அம்மா
கல்லோனை உன்மனசு முத்துமாரியம்மா
இன்னும் கரையலையோ எள்ளளவும் மாரிதேவியம்மா - அம்மா
இரும்போனை உன்மனசு முத்துமாரியம்மா
இன்னும் இளகலையோ எள்ளளவும் மாரிதேவியம்மா - அம்மா
கல்லும் கரைந்துவிடும் முத்துமாரியம்மா
உந்தன் மனம் கரையாததென்னவிதம் மாரிதேவியம்மா - அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் வருந்துகிறேன் முத்துமாரியம்மா
உந்தன் பார்மனைக்கும் கேட்கலையோ மாரிதேவியம்மா-அம்மா
குழந்தை வருந்துகிறேன் முத்துமாரியம்மா
உந்தன் கோயிலுக்கும் கேட்கலையோ மாரிதேவியம்மா-அம்மா
இரும்பும் இளகிவிடும் முத்துமாரியம்மா
உந்தனிருதயம் இளகாத தென்னவிதம் மாரிதேவியம்மா - அம்மா
உண்டென்றார் வாசலெல்லாம் முத்துமாரியம்மா
ஒளிவிளக்காய் நின்றாயம்மா மாரிதேவியம்மா - அம்மா
இல்லையென்றார் வாசலெல்லாம் முத்துமாரியம்மா
இட்டாய் பெருநெருப்பு மாரிதேவியம்மா - அம்மா
அணலோனை உன்சொரூபம் முத்துமாரியம்மா
அண்டலிக்கக் கூடுதில்லை மாரிதேவியம்மா - அம்மா
மாரியென்றால் மழைபொழிவாய் முத்துமாரியம்மா - அம்மா
தேவியென்றால் தேன்சொரிவாய் மாரிதேவியம்மா - அம்மா
தவத்தால் பெருத்தவவே முத்துமாரியம்மா
நீயும் சாத்திரத்தில் வல்லவவே மாரிதேவியம்மா - அம்மா
குலத்தால் பெருத்தவவே முத்துமாரியம்மா
நீயும் கோடிமன்னர் வங்கிசமாம் மாரிதேயம்மா - அம்மா
இனத்தால் பெருத்தவவே முத்துமாரியம்மா
நீயும் இராசாக்கள் வங்கிசமாம் மாரிதேவியம்மா - அம்மா
கும்பத் தழகியரே முத்துமாரியம்மா
நீயும் கோபாலன் தங்கையரே மாரிதேவியம்மா - அம்மா
கரகத் தழிகியரே முத்துமாரியம்மா
காரண சௌந்தரியே மாரிதேவியம்மா - அம்மா
பட்ட துயர் போதுமம்மா முத்துமாரியம்மா
எங்கள் பாவங்களைத் தீரேனம்மா மாரிதேவியம்மா - அம்மா
பத்தினியாள் கதைபடிக்க முத்துமாரியம்மா
பட்டமரம் பால்சொரியும் மாரிதேவியம்மா - அம்மா
உத்தமியாள் கதைபடிக்க முத்துமாரியம்மா
உழுத்தமரம் மரம் பால்சொரியும் மாரிதேவியம்மா - அம்மா
அத்தலரி கொத்தலரி முத்துமாரியம்மா
அடுக்குமல்லிப் பூவெடுத்தேன் மாரிதேவியம்மா - அம்மா
கையாலே பூவெடுத்தால் முத்துமாரியம்மா
காம்பழுகிப் போகுமென்றே மாரிதேவியம்மா - அம்மா
வெள்ளியினால் கொக்கை செய்து முத்துமாரியம்மா
விதம்விதமாய் மலர் பறித்தேன் மாரிதேவியம்மா - அம்மா
தங்கத்தினால் கொக்கை செய்து முத்துமாரியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுந்தமலர் நான் பறித்தேன் மாரிதேவியம்மா - அம்மா
வாங்கிவந்த பூமலரை முத்துமாரியம்மா
வகைவகையாய் நாம் சொரிந்தோம் மாரிதேவியம்மா - அம்மா
கேட்ட வரம் தந்தவவே முத்துமாரியம்மா
எங்கள் கொம்பனையே வாவேனம்மா மாரிதேவியம்மா - அம்மா
ஆங்கார மாரி நீயே முத்துமாரியம்மா
அகோர பராசக்தி நீயே மாரிதேவியம்மா - அம்மா
சடைக்குச் சடை நாகமம்மா முத்துமாரியம்மா
சதுரமெங்கும் ருத்திராக்கம் மாரிதேவியம்மா - அம்மா
நாகம் குடைபிடிக்க முத்துமாரியம்மா
நல்நாகம் தாலாட்ட மாரிதேவியம்மா - அம்மா
சேடன் குடைபிடிக்க முத்துமாரியம்மா
செந்நாகம் தாலாட்ட மாரிதேவியம்மா - அம்மா
பாம்போ தலையணைதான் முத்துமாரியம்மா
பாம்புசடம் பஞ்சுமெத்தை முத்துமாரியம்மா
வேம்போ தலையணைதான் முத்துமாரியம்மா
வேப்பமிலை பஞ்சுமெத்தை மாரிதேவியம்மா - அம்மா
செக்கச் சிவந்தவவே முத்துமாரியம்மா
செங்கண்ணன் சோதரியே மாரிதேவியம்மா.

## ஸ்ரீகாளி ஸ்தோத்திரம்

**ராம்: வராளி** **தாளம்: ஆதி**

யாது மாகி நின்றாய் - காளி எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன் யெல்க ளன்றி யில்லை
போதும் இங்கு மாந்தர் - வாழும் பொய்மை வாழ்க்கையெல்லாம்
ஆதி சக்தி, தாயே! என்மீ தருள் புரிந்து காப்பாய். (யாது)

எந்த நாளும் நின்மேல் - தாயே! இசைகள் பாடி வாழ்வேன்
கந்த னைப்ப யந்தாய் - தாயே கருணை வெள்ள மானாய்!
மந்த மாரு தத்தில் - வானில் மலையி னுச்சி மீதில்,
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன் செம்மை தோன்று மன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியம்மை பதிகம்

மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த
மிடியுந் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந்து ரத்தப்
பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்தப்
பசியென் பதுந்து ரத்தப்
பாவந் துரத்தஅதி மோகந் துரத்தப்
பலகா ரியமுந் துரத்த
நகையுந் துரத்தஊழ் வினையுந் துரத்த
நாளுந் துரத்த வெகுவாய்
நாவரண் டோடியே கால்தளர்ந் திடும் என்னை
நமனுந் துரத்து வானோ?
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிரா மியே!

உட்பொருள்: மனித வாழ்க்கையின் முன்வினை உந்தலால் ஆசைகள் துரத்தவும், நோய்களும் கோபமும் மிரட்டவும் சஞ்சலங்களும் முதுமையுடன் கூடிய வேதனைகளும் என்னைப் பின் தொடரப் பகையும் வஞ்சனையுடன் கூடிய பசி மிரட்டவும் எனது முன்வினை உந்தலால் அதீத ஆசைகள் பின் தொடரவும் பல்வேறுபட்ட பிணிகளுக்குள்ளே நகைப்பிற்கிடமான ஊழ்வினையுடன் கூடிய நாள் வேகமாகத் துரத்த களைப்படைந்து நா வறள இருக்கும் என்னை யமனுந் துரத்துவானோ? இந்த அகில உலகங்கட்கெல்லாம் ஆதாரமான அன்னை சக்தியே! பாவியேனைக் காத்தருளும் அன்னையே! ஆதிகடவூரில் எழுந்தருளி இருப்பவளே! சிவனின் இடப்பாகம் உறைபவளே! அபிராமித் தாயே அருள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ முருகன் பாடல்

ராகம்: நாட்டைக்குறிஞ்சி தாளம்: ஆதி

**பல்லவி**

முருகா - முருகா - முருகா

**சரணங்கள்**

வருவாய் மயில்மீ தினிலே, வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும், தவமும் திறமும் தனமும் கனமும்
(முருகா)

அடியார் பலரிங் குளரே, அவரை விடுவித் தருள்வாய்!
முடியா மறையின் முடிவே! அசுரர், முடிவே கருதும் வடிவே லவனே!
(முருகா)

சுருதிப் பொருளே வருக! துணிவே, கனவே, வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார், கவலைக் கடலைக் கடியும் வடிவேல்
(முருகா)

அமரா வதிவாழ் வுறறே அருள்வாய் சரணம்! சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக் குமுறும் கூர்வே லவனே, சரணம்!
(முருகா)

அறிவா கியகோ யிலிலே அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார் புதுவாழ்வுறவே புவிமீ தருள்வாய்
(முருகா)

## முருகப்பெருமான் விஸ்வரூப தரிசனம் கொடுத்தபோது சூரபதுமன் கூறியது

கோலமா மஞ்ஞைதன்னில் குலவிய குமரன்தன்னைப்
பாலனென்றிருந்தேன் அந்நாள் பரிசிலை உணர்த்தியேன் யான்
மாலயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தியும் மூர்த்தியன்றோ.

## வாழ்த்து

*வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்*
*கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க*
*நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க*
*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.*

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை
வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளின்
முன்னைய கோவில் தோற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முத்துமாரி அம்பாளுடைய கருணையே கருணை

அக்கணத்து ஆயிடை|| ஐங்கரத்தவன்|| அருள்
முக்கண்|| நால்வாயினான்|| மும்மதத்து ஆறு பாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத்தவன்|| மதிச்
செக்கர் வார் சடையனோர் சிறுவன் வந்தருளினான்||

---

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரி புரவஞ்சரை அஞ்சக் குனி பொருப்புச் சிலைக்கை
எரி புரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

சிறிய பாதங்களிலே சிலம்புகளை அணிந்து, பாசம் அங்குசம், பஞ்சபாணங்கள் ஆகியவற்றைக் கரங்களில் ஏந்தி, மூவுலகங்களிலும் அழகிலே மேம்பட்டவளாயும் குங்குமம் போலும் திருமேனியையும் உடையவளாகி, தீமையான எண்ணத்தையும் செயலையும் கொண்டவர்களாகிய முப்புரத் தவர்களாகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்துயுன்மாலி என்னும் அசுர வஞ்சகர்கள் அஞ்சும்படியாக, மகாமேருமலையை வில்லாகக் கையிலே ஏந்தியிருக்கின்றவரும், அக்கினிபோலும் மேனியை உடையவருமாகிய சிவபிரானது செம்மையான இடதுபாகத்தில் இருக்கின்ற பெருமாட்டியே! (உம்மைத் தொழுகின்றோம்)

இற்றைக்குப் பலகாலங்களுக்கு முன்பாக தென்னிந்தியாவிலுள்ள கோடிக்கரை துறைமுகம் ஊடாக எம் பெருமாட்டியார் ஒரு வள்ளத்தில் ஏறிவந்து வல்வை நகரின் கடற்கரையில் இறங்கி இவ்வூரிலே கோவில் கொண்டு எழுந்தருளியதாக ஒரு ஐதிகம் வழங்குகின்றது. இதனை உறுதிப்படுத்துவது போல கோபுர வாசல் மண்டபத்திலே அன்னையின் வருகை பற்றிய சித்திரங்களும் வரையப்பட்டுள்ளன. அது மாத்திரமல்லாமல் அம்பாளின் இராசகோபுரத்திலும் இக்காட்சியானது சிலையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை மனதிலே கொண்ட அன்பர் ஒருவருடைய குடும்பத்தவர்கள் சென்ற வருடம் அம்பாளுக்காக ஒரு வள்ளத்தினை வடிவமைப்பித்தார்கள். மூன்றாம் திருவிழா அன்று பகல்திருவிழாவில் அம்பாள் அவ்வள்ளத்தில் எழுந்தருளி வீதிவலம் வரும்படியாகச் செய்து தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றியதன் மூலம் அம்பாளுடைய பக்தர்களும் தரிசித்து உய்யும்படியானதொரு நல்ல தொண்டினைச் செய்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமியின் மகோற்சவங்கள் பங்குனிமாதப் பௌர்ணமியில் நிறைவு பெறுகின்றன. அடுத்த இருநாட்களும் அம்பாள் திருவிழாவும் சண்டேஸ்வரப் பெருமானுடைய உற்சவங்களும் நடைபெறும். அத்துடனேயே முத்துமாரி அம்பாளுடைய கொடியேற்றத்தையும் இதோ தொடங்கப்போகிறது என்று வல்லையிலும் அதைச் சூழவுள்ள ஊர்களிலும் உள்ள அம்பாள் அடியவர்கள் எதிர்பார்த்து மனமகிழ்ச்சியோடு இருப்பர். இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து வாழுகின்ற வல்லை அம்பாள் அடியார்களும் தங்கள் மனங்களில் முத்துமாரி அம்பாளுடைய திருவருளை வேண்டிநிற்பர். சித்திரை மாதத்துப் பூரணை தினத்தில் பதினைந்தாவது நாள் உற்சவமாகிய தீர்த்த உற்சவம் நிகழும். அதற்கேற்ற முறையாக அதற்கு முந்திய அமாவாசை தினத்திலோ அல்லது மறுநாளோ கொடியேற்ற உற்சவம் நடைபெறும்.

முத்துமாரி அம்பாளுடைய திருவிழாவின் மகிமையைப் பற்றிச் சிந்திப்போம். கொடியேற்றத்தின் முன்பும் தீர்த்த உற்சவத்தின் பின்புமாகச் சுமார் இருபது நாட்களும் வல்லைநகரமானது புனிதமாக்கப்படும். அதுமாத்திரமல்ல, வல்லை வாசிகளும் அம்பாள் அடியார்களும் கூட தாங்கள் செய்யக் கூடாத விலக்கவேண்டிய கருமங்களையெல்லாம் விலக்கிப் புனிதர்களாகி விடுகிறார்களென்றால் அம்பாளுடைய உற்சவத்தின் மகிமையை என்னவென்று வியந்து கூறமுடியுமா?

**மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு இல் என்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை.**

நிலைபெற்ற உயிர்களையெல்லாம் பாதுகாத்து, அந்த உயிர்கள் மீது இரக்கம் காட்டுகின்றவர்களுக்கு, தங்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படப்போகின்றதே என்ற பயமானது இல்லை. இது திருவள்ளுவருடைய பொய்யாமொழியாகும்.

திருவள்ளுவருடைய வாக்குப்படியே அடியார்கள், வல்லை வாசிகள் யாவரும் இந்த இருபது நாட்களும் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்த அம்பாளுடைய கருணைதான் என்றால் மிகையாகாது.

வல்லைமாநகரில் ஊரிக்காடு தொடக்கம் ஊறணி வரையான நீண்ட பாதைகள் குப்பைகள், கழிவுகள் எல்லாம் அகற்றப்பட்டு தண்ணீர் தெளிக்கப்பட்டுப் புனிதமாக விளங்கும். அத்துடன் இரவில் பிரகாசமான விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருக்கும். அது போலவே வல்லைமக்கள், அம்பாள் அடியார்கள் யாவரும் தங்கள் தங்கள் மனதிலிருக்கும் குற்றங்கள் நீங்கியவர்களாய் மனங்களிலும் அறிவு என்னும் ஒளியை உடையவர்களாய் அம்பாளுக்கு சரியை முறையாகவும் கிரியை முறையாகவும் வழிபாடு செய்கின்றார்கள் என்று சொன்னால் அது அம்பாளுடைய கருணையே அன்றி வேறெதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு.**

எமக்கு வருகின்ற துன்பங்களைத் தாங்கிக்கொண்டு மற்ற உயிர் களுக்கும் துன்பம் செய்யாமல் இருப்பதுதான் விரதத்தினுடைய வடிவமாகும் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

அவருடைய வாக்கின்படி அம்பாள் அடியார்கள் தங்களுடைய பசியையும் தாங்கிக்கொண்டு மற்ற உயிர்களுக்கும் துன்பம் செய்யாமல் இருபது தினங்களும் விரதம் காக்கின்றார்கள் என்று கூறினால் அதற்கு மூலகாரணமாக இருப்பது அம்பாளுடைய அருட்பெரும் கருணையே.

அம்பாளுடைய இத்திருவிழா நாட்களில் தங்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக அம்பாள் அடியார்கள் தங்கள் உடல் வருந்தும்படியாக முதுகிலே முட்களைச் செலுத்தி அலகுகளிலே ஊசிக ளையும் ஏற்றிக்கொண்டு நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலில் இருந்தும் வேறு அயலிலுள்ள கோவில்களில் இருந்தும் முத்துமாரி அம்பாள் கோவிலை நோக்கி அம்பாளைத் தரிசித்துப் பாடும் பாடல்களையெல்லாம் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வந்து சுட்டெரிக்கின்ற அக்கினித் தழல் மீது நடந்து பின் உள்வீதி வலம்வந்து கரகங்களை இறக்கித் தமது நேர்த்திகளை நிறைவு செய்வார்கள். இவைகளையெல்லாம் செய்வதற்கு மூலகாரணமாக விளங்குவ தும் அம்பாளுடைய சமுத்திரம் போன்ற கருணைதான்.

புலம்பெயர்ந்து வாழ்பவர்களும் இடம்பெயர்ந்து வாழுகின்றவர்களும் கூட அம்பாளுடைய திருவிழாக் காலங்களில் தாங்கள் இருக்கும் இடங்களில் இருந்தவாறே அம்பாளை நினைந்து விரதங்களை அனுட்டிக்கிறார்கள். வெளிநாடுகளில் வெளியூர்களில் இருப்பவர்களும் எப்படியாவது அம்பாள் திருவிழாவில் பங்குகொள்ளவேண்டும் என்ற விருப்பத்தினால் பல சிரமங்கள் மத்தியிலும் இங்கு வருகைதருகின்றனர்.

அம்பாள் நகர்வலமாக வருகின்ற வழிகள்தோறும் அலங்காரங்கள் செய்தும், புனிதப்படுத்தியும் அடியார்களுடைய களைப்பைத் தீர்க்கும் பொருட் டாக தாகசாந்திச் சாலைகளை அமைத்தும் இப்படியான தொண்டுகளை அன்பர்களைக்கொண்டு செய்விக்கின்ற தன்மைக்கும் எல்லாம் அம்பாளின் அருளே மூலகாரணமாகும். அம்பாளின் அருள் என்றும் எல்லோர்க்கும் கிடைப்பதாக.

*அம்பாள் அருள் கொண்டு*
**தாரணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அழகு...

– வல்வையூர் அப்பாண்ணா –

அரசடி வைரவர் வாசல் கிணற்றில் கால் கழுவி வைரவருக்கு வணக்கம் சொல்லி நடந்துவர இடதுபுறம் சத்திரமும் வலதுபுறம் தேர்முட்டியும் வருகிறது. கழுவேறியை ஒரு சுற்றுச் சுற்றி மேற்கு நோக்கித் திரும்பி ஒரு நீள் பார்வையைச் செலுத்துகிறோம். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். ஐந்து நிலைகள் கொண்ட நெடிதுயர்ந்த கோபுரம் இது. அம்பாள் திருவவதாரங்கள் - திருவிளையாடல்கள் ஆகியவை சீமெந்துச் சிற்பங்களாக நிரம்பியுள்ளன. கருவறையைப் பார்த்தபடி கரம்கூப்பி வணங்கிக்கொண்டு வலம் சுழியாக வெளிவீதியை வலம்வருகிறோம். கோபுர வாசல் மண்டபத்தை ஒட்டியதாக புதிதாக ஒரு தாழ்வாரப் பகுதியும் பின்புறம் மணிக்கோபுரமும் தொடர்ந்து காத்தலிங்கசுவாமி சந்நிதானத்தின் பின்புறமும், தென்கிழக்கு மூலையில் மடப்பள்ளியின் பின்புறமும் தெரிகிறது.

## தெற்கு வீதியழகு:

அகலத் திறந்திருக்கும் இரும்புக் கதவுகள் கொண்ட வாசல் ஊடாக வசந்த மண்டபம் தெரிகிறது. ஆசௌசகாரர் வசந்தமண்டபப் பூசையினைத் தரிசிக்கக்கூடியதான ஏற்பாடு இது. வெளிப்பக்க சுற்றுச் சுவரின் மேல் விளிம்பில் சீமெந்தினால் செய்யப்பட்ட சலசங்கள் போன்ற அமைப்பு நீக்கமற நெருக்கமாகக் காணப்படுகிறது. தெற்கு - மேற்கு - வடக்கு என மூன்று சுவர்களிலும் காணப்படும் இக் கலச அமைப்புகள் கோயில் சுவருக்கு ஒரு புதுப் பொலிவைக் கொடுக்கிறது. தெற்கு வாசல் அழகிய தோற்றம் கொண்டது. தடித்த பெரிய மரக்கதவுகளைத் தாங்கிய வாசற்பகுதியின் வெளிப்புறத்தே இரு பக்கமும் 6 அடி உயரம் கொண்ட சுடர் விட்டுப் பிரகாசிக்கும் பிரம்மாண்டமான விளக்குகளும், அதற்கு மேலாக இரு அன்னப்பறவைகளும், இரு வாயில் காக்கும் பெண்கள் கைகளில் வாளும் கதாயுதமும் கொண்டு வாயில் காப்பது போலவும் அழகிய வர்ணத்தில் வரையப்பட்டுள்ளது. இரு தளங்கள் கொண்ட மையப்பகுதியின் கீழ்ப்புறத்தில் அம்பிகையின் திருவுருவம் மையத்திலும், கணபதியும் முருகனும் அருகேயும் சீமேந்தினால் சிற்பங்களாக வடித்துள்ளனர். மேற்தளத்தில் வண்ணச் சேலைகளின் அலங்காரம் தெரிகிறது.

## மேற்கு வீதியழகு:

தென்மேற்கு மூலையில் இருந்து பார்த்தால் பிள்ளையார் சந்நி தானத்தின் பிற்பக்கமும், அதனைத் தொடர்ந்து, தமிழக மாடக் கோயில்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதைப்போன்று மேலும் கீழுமாக அம்பிகையின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. கீழே அம்பாள் அருகே 2 சிங்கங்களும், மேலே 3 சிங்கங்களுமாக அனைத்துமே ஆக்ரோஷமாகக் கர்ச்சித்தபடி உள்ளன. முருகன் சந்நிதானத்தின் பின்புறத்தைக் கடந்து நடந்தால் வடமேற்கு மூலையில் காக்கும் தேவதையும் - அருகே இரண்டு சிங்கங்களும் காணப்படுகின்றன. இப்போது நாம் வெளிப் பிரகாரத்தின் வடக்குப் புறமாக - பிரதான வீதியருகே நின்றபடி, வீதியின் வடபக்கமாக உள்ள மோர் மடத்தின் அழகினை ரசித்தபடியே நடக்கிறோம்.

**வடக்கு வீதியழகு:**

மொத்தம் 11 தூண் இடைவெளிகள் உள்ள வடக்குப்புற நீண்ட சுவரின் மையப்பகுதியில் அம்பிகையின் திருவுருவம் கொண்ட மாடம் காணப்படுகிறது. நடுவே அமர்ந்திருக்கும் அம்பிகைக்கு இருபுறமும் சேடிப்பெண்கள் சாமரை வீசுவது போலவும், இருபக்கமும் உள்ள யானைகள் தும்பிக்கைகளில் தாமரைப் பூ ஏந்தியபடி அக்காட்சியினை அமைத்துள்ளார்கள். கண்ணைப்பறிக்கும் வண்ண நிறத்தில் நம்மை ஈர்க்கும் வசந்த மண்டபத்தின் பின்புறம் வந்துநிற்கிறோம். சீமேந்துத் தளத்திலான வசந்த மண்டபத்தின் மேல் விளிம்பில் வடக்கே 27, கிழக்கே 24, மேற்கே 22 என 73 சீமெந்துக் கலசங்கள் பொருத்தப்பட்டுள்ளன. கலசங்களுக்கு கீழாக பல அடுக்குகளில் பல விதங்களில் மாலை அலங்காரங்கள் சீமெந்தினால் செய்யப்பட்டு அழகிய வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. இந்த வர்ண மாலை அலங்காரம் வடகிழக்கு மூலையில் உள்ள அலுவலக அறைவரை தொடருகிறது.

**மணலுக் கிணறு:**

கோயிலின் வடகிழக்கு மூலையில் பிரதான வீதியின் மறுப்பக்கமாக காணப்படும் கிணறு ***மணல்க் கிணறு - மணலுக் கிணறு*** எனப் பல பெயருடன் அழைக்கப்படுகிறது. ஒரு காலத்தில் துலாக் கிணறாக இருந்த கிணறு அண்மைக் காலத்தில் கப்பிக் கிணறாகிவிட்டது. அம்பாள் கோயில் வளாகத்தினுள் கிணறுகள் தோண்டப்படுவதற்கு முன்பு இந்த ***மணலுக்*** கிணற்றிலிருந்தே அம்பிகையின் திருமஞ்சனத்திற்கு நீர் எடுத்துச் செல் லப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. அம்பாளின் பழைய வரலாறுகள் - அச்சுப் படிவங்கள் ஆகியவற்றில், "தாசிந்தா ***மணல்*** தாய்" என்றே குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கலாம். இதல் வருகிற ***"மணல்"*** என்கிற வார்த்தைக்கும் ***மணல்க்*** கிணறு என இன்றும் அழைக்கப்படுவதற்கும் உள்ள ஒற்றுமையை அன்பர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும். பகலிலே ஜில்லெனக் குளிர்ந்தபடியும் இரவில் கதகதவென வெண்சூட்டுடன் இருப்பது இந்த கிணற்று நீரின் தனி விசேடம். மழை விழுகிற இரவு வேளையில் குளித்தாலோ கன்னியா வெந்நீரூற்றில் குளித்துவந்த உணர்வு ஏற்படும். கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளாகத்தின் வடகிழக்கு மூலையில் புதிய பொலிவுடன் உள்ள மோர் மடத்தையும் தேர்முட்டியையும் நிமிர்ந்து பார்க்கிறோம்.

**பூங்காவன மண்டப(ம்) அழகு:**

களஞ்சிய அறையின் பிறபக்க மூலையில் பூங்காவனத்தின் வடக்காக ஒரு குட்டி யன்னல் காணப்படுகிறது. ஆசௌசம் உள்ளவர்கள் முருகன் சந்நிதானத்தில் நடைபெறும் பூசையினைப் பார்ப்பதற்கான ஒழுங்கு இது. பூங்காவனம் அருகே வந்திருக்கிறோம். பார்க்க பரிதாபமான நிலையில் மேலேயுள்ள பந்தலைத் தாங்கிநிற்கும் இரும்புத் தூண்களின் அடிப்பாகங்கள் இத்துப்போய் கவலைக்குரியதாய் காட்சியளிப்பது அழகுக்கு அழகு சேர்க்கும் கோயிலின் வனப்புக்கு ஒரு பின்னடைவே. நல்நோக்குடையோர், தர்மகர்த்தா சபையினர், பொதுமக்கள் அனைவரும் இணைந்து ஆற்றவேண்டிய அவசர பணி இது. நன்றே செய்வோம். அதனை இன்றே செய்வோம். பூங்கா வனத்துக்கும் கோபுரத்துக்கும் இடையே மணிக்கோபுரம் தெரிகிறது.

**கோபுர வாசல் மண்டப அழகு:**

வர்ணங்கள் தீட்டப்பட்டு புதுப் பொலிவுடன் திகழும் வாயில் மண்டபம் மஞ்சள் நிறம் சற்றுத் தூக்கலாகத் தெரிந்த போதும் பார்ப்பவரைப் பரவசப்படுத்துகிறது. கோபுர வாசலினுள் நின்றபடி கிழக்காகச் சற்று மேலே நிமிர்ந்து பார்க்கிறோம். மண்டபத்தின் மேல் உள்ள கருங்கல் விதானப் பகுதியில் அழகிய வர்ணத்தில் ஓவியங்கள் கீறப்பட்டு, அவற்றின் விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. நடுவே, அம்பிகையின் வரலாற்றுப் பகுதிகளும், வலதுபக்கம் பிள்ளையார், இடது பக்கம் முருகன் திருவிளையாடல்களும் வரையப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் 26-01-1967ல் கோயிலும் கோபுரமும் கும்பாபிஷேகம் நடைபெற்ற வேளையில் (43 ஆண்டுகளுக்கு முன்பு) கீறப்பட்ட சித்திரங்களாகும். இதற்குப் பயன்படுத்தப்பட்ட வர்ணங்களும் ஓவியர்களும் தமிழகத்திலிருந்து வரவழைக்கப்பட்டவையாகும்.

அம்பாள் கோடிக்கரையிலிருந்து புறப்படுதல் (இடது, மேலே), அம்பாள் வல்வை வந்தடைதல். (இ.கீழே) அம்பாள் கோயில் கொண்டருளுதல். (வலது கீழே) அம்பாள் தேவஸ்தானம். (வ.மேலே) நடுவே வட்டவடிவ அலங்காரம், அதன் கீழ் காத்தவராயன் கழுவேறுதலும் - அம்பாள் பாவ விமோசனமும் (இ.மே), காத்தவராயன் தேவகன்னிகையின் சேலையைத் திருடுதல் (வ.மே), மகிடா சூரசம்ஹாரம் (இ.கீ), அம்பாள் லிங்க பூசை (வ.கீ) ஆகியவை அழகுற கீறப்பட்டுள்ளன.

வலதுபக்கம் கணபதியின் திருவவதாரமும் திருவிளையாடல்களும், அதேபோல இடதுபுறம் முருகன் மண்டபத்தில், "ஏறிவிளையாடு முகம் ஒன்றே" என்று தொடங்கும் திருப்புகழின் ஒவ்வொரு வரிக்கும் ஒவ்வொரு சித்திரமாக வரைந்துள்ளார்கள். இந்த ஓவியங்கள் சேதமடையாமல் பாதுகாக்க கருங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானத்துக்கு மேலாக சீற்றினால் கூரை அமைக்கப்பட்டிருப்பினும் வெப்ப மிகுதியினால் இங்கொன்று அங்கொன்றாக சில எழுத்துக்களும் சித் திரங்களின் சில ஓரங்களும் மங்கிப் போயுள்ளன. கோபுரத்துக்கும் மணிக்கோபுரத்துக்கும் இடையேயுள்ள சிறிய யன்னல் ஊடாக பிள்ளையார் பூசையினைப் பார்க்க முடிகிறது.

**உள் வீதியழகு:**

கோபுர வாயிற்படி கடந்து உள்வீதியின் மையப்பகுதியில் நின்றபடி நீள் பார்வையைச் செலுத்துகிறோம். நேரே தம்பத்துப் பிள்ளையார், தம்பம், பலிபீடம், சிம்மம் கொண்ட தம்ப மண்டபத்தைத் தொடர்ந்து ஒரு கோயில் போன்ற வேலைப்பாடுகளுடன் கூடிய தரிசன மண்டப வாசல் தாண்டி மகாமண்டபம் தெரிகிறது. தொடர்ந்து அர்த்த மண்டபமும், மின் ஒளியில் பிரகாசிக்கும் கருவறையில் அம்பாளின் அழகிய தோற்றமும் தெரிகிறது. விழாக் கால விசேட அலங்காரங்களுடன் காட்சிதரும் ஆயிரம் கண்ணுடைய அலங்காரியின் அழகினை அள்ளிப் பருகுகிறோம். கண்கள் பனிக்கின்றன. உள்ளம் நிறைகிறது அம்மா! அம்மா!! எனக் கரம் கூப்பித் தொழுது வணங்கிக் கொண்டு பார்வையை வலதுபக்கம் திருப்பினால் வசந்த மண்டபம் திரையிடப்பட்டு மூடப்பட்டுள்ளது. இடது பக்கம் பார்த்தால், நாம் ஏற்கனவே வெளிவீதியில் நின்று பார்த்த இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்ட நடைவாசல்.

அம்பாள் திருக்கோயிலின் உள்வீதி முழுவதும் அமைக்கப்பட்டுள்ள வில்லுமண்டபத்தின் அழகு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. ஒரே அமைப்பான நிறைந்த வேலைப்பாடுகள் கொண்ட அழகிய தூண்கள் வில்லு மண்டபத்தை தாங்கி நிற்கின்றன. முன்பு இருந்ததைவிட தூண்களிடையே அகலம் கூடியும், தூண்களின் எண்ணிக்கை குறைவாயுமுள்ளமை அம்பாளும் பரிவார மூர்த்தங்களும் அடியார்களுடன் உள்வீதி உலாவரும் வேளையில் மிக்க வசதியாயுள்ளது. உள்வீதிக்கான வில்லு மண்டப வேலைகள் முழுமையாக நிறைவுபெற்று உள்வீதி முழுவதும் அழகுடன் மிளிர்வது இவ்வருட மகோற்சவத்தின் சிறப்பம்சமாகும். வில்லு மண்டப தூண் இடை வெளிகளில் சில பொதுமக்களின் உபயமாகவும், பல அம்பாளின் அடிய வர்களின் தனிப்பட்ட செலவில் தனித்தனி உபயமாகவும் கட்டி முடிக் கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

காத்தலிங்க சுவாமி வாசலில் நின்றபடி பிள்ளையார் வாசலை நோக்கிப் பார்த்தால் ஒரு நூலிடை பிசகில்லாமல் வரிசையான தூண்களும், அதன் மேல் அம்பாளின் நவசக்திகளைக் குறிக்கும் வகையிலான ஒன்பது மடிப்புகள் கொண்ட அழகான வில்லு மண்டபத்தையும் பார்த்து ரசிக்கலாம். ஒவ்வொரு மடிப்பும் பச்சை - மஞ்சள் - சிவப்பு எனப் பின்னணி நிறத்தின் மேல் செடிகளும், பூ வண்ணங்களும் அலங்கார நிறங்களில் காணப் படுகின்றன. பல வரிசைகளில் மின் அலங்கார விளக்குகள் பொருத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. நடுவே மைய வில்லு மண்டபத்தில் தொங்கும் அலங்கார விளக்குகள் ஒன்றுபோல மற்றொன்று இல்லாமல் அமைந்திருப்பது மண்டபத் திற்கு மேலும் அழகூட்டுகின்றது.

காத்தலிங்க சுவாமி சந்நிதானத்தில் மூலவர் அருகே குதிரை வீரராக உற்சவர் காத்தலிங்கர் அமர்ந்துள்ளார். மகோற்சவம் ஆரம்பமாக இரண்டொரு நாட்கள் முன்பு ஊரெல்லாம் சுற்றிவந்து திருவிழா ஆரம்பம் பற்றித் தெரியப்படுத்துபவர் இவரே. மடப்பள்ளி அருகே வசந்த மண்டபம் நோக்கிய வாசல் பக்கமாக, வசந்த மண்டபத்தைப் பார்த்தபடி அம்பிகையின் திருவுருவம் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. 8' X 5' அளவு கொண்ட சுவரில், மலர்ந்துள்ள தாமரைப்பூவினுள் திருப்பாதம் பதித்து, ஒரு காலை மடக்கி, 5 தலை நாகம் படமெடுக்க, அழகிய திருவாசியுடன், வலது கைகளில் வாளும் உடுக்கையும், இடது கைகளில் அன்ன பாத்திரமும் சூலமும் என அம்பாளின் திருவுருவம் மிக நேர்த்தியாக வரையப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தின் கண்களை உற்றுப் பாருங்கள். நீங்கள் எந்தத் திசையிலிருந்து பார்த்தாலும் உங்களையே பார்ப்பதைப் போன்ற ஒரு பிரமை வரும். கூடவே பயமும் பற்றிக் கொள்ளும். இது ஓவியனின் கைவண்ணச் சிறப்பு.

நீண்ட மண்டபத்தின் இடது புறமாக வாகனங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. பழைய பெரிய வாகனங்களுடன் புதிதாகச் சேர்ந்துள்ள சிறிய சிறிய வாகனங்களினதும் அழகு அலாதியானது.

உள்வீதியில் தெற்கு வாசல் மேற்புறத்தில் சீமெந்தினால் ஆக்கப்பட்ட பிள்ளையார் முருகனுடன் அம்பிகையின் சிற்பங்களும் காணப்படுகின்றன. உள்ளே உற்சவ மூர்த்தங்கள் அமர்ந்திருக்கும் மண்டபத்தில் முருகன், கணபதி, அம்பாள் (வெள்ளிக் கிழமைகளில் வீதி உலாக் கொள்பவர்) சிறிய மூர்த்தங்களாக அமர்ந்துள்ளனர். நேராக கணபதியின் தரிசனம், கருவறைப் பண்டிகையின் மேல் உள்ள சிற்ப வடிவங்களைப் பார்த்தபடி கோமயம் அருகே வருகிறோம். நீங்கள் எப்போதாவது கோபுரத்தின் பிற்பக்கத்தைப் பார்த்திருக்கிறீர்களா? சண்டேஸ்வரிக்கும் கோமயத்தும் அருகேயுள்ள இந்த ஒரு இடத்தில் மட்டுமே கோபுரத்தின் பிற்பக்கம் தெளிவாகத் தெரிகிறது. அடுத்து முருகன் சந்நிதான தரிசனம். செங்களநீர் தொட்டி, புதிதாகக் கட்டப்பட்டுள்ள தண்ணீர் தாங்கி, நந்தவனக் கிணறு, நந்தவனம், மின்சார கட்டுப்பாட்டறை என உள்வீதியின் வடபுறம் அமைந் துள்ளது.

**சங்காபிஷேக மண்டப அழகு:**

சற்சதுர வடிவான அழகிய நான்கு தூண்கள் தாங்கும் சங்காபிஷேக மண்டபம் இது. தூண்களின் மேற்பகுதியில் சுருண்டபடி தலை உயர்த்தியுள்ள நான்கு நாகங்களின் தலைமீது தளம் தாங்குவது போன்ற அமைப்பு இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தளத்தின் கீழ்ப்புறத்தில் பெரிய வட்ட அமைப்பில் தாமரை மலர்ந்திருப்பது போன்று நான்கு அடுக்குகளாகச் சீமெந்தினால் அமைத்து இளஞ் சிவப்பு வர்ணத்தில் வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. இந்தத் தாமரை வடிவமும் வர்ணமும், அதே வர்ணத்தில் நடுவே தொங்கும் அலங்கார மின் விளக்கும் பார்ப்போரை வியப்பில் ஆழ்த்துகிறது.

மண்டபத்தின் மேற்குப் பக்கச் சுவரின் மேற்பகுதியில் முப்பரிமாணப் படம் போன்ற ஒருகாட்சி வடிவமைப்பு காணப்படுகிறது. முற்பக்கமாக ஒரு இருக்கையில் அம்பாள் அமர்ந்திருக்க, ஐந்து தலை நாகம் தலைக்கு மேலாகப் படமெடுக்க, இருசோடிப் பெண்கள் இருபுறமும் நின்றபடி சாமரை வீச, கர்ச்சிக்கும் இரு சிங்கங்கள் இருபுறமும் உள்ளன. பிற்பக்கச் சுவர் முழுவதும் அழகிய இயற்கைக் காட்சிகள் கீறப்பட்டுள்ளன. மலையிலிருந்து வரும் அருவிகள், கிளைகள் பரப்பிய மரங்கள், மரங்கள் மீதமர்ந்துள்ள பட்சிகள், ஒரு கிளையில் பகையாளிகளான பாம்பும் மயிலும் அருகருகே அமர்ந்திருப்பது போன்ற காட்சிகளெல்லாம் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

சங்காபிஷேக மண்டபத்தின் மேற்காக சிறிய பொங்கல் மண்டபம் உண்டு. இதன் ஒரு ஓரத்தில் தினசரி பூசை வேளையில் ஒலிக்கும் மங்கல ஓசைக் (மின்சாரத்தில் இயங்குவது) கருவி பொருத்தப்பட்டுள்ளது. வடகிழக்கு மூலையில் தேவஸ்தான அலுவலகம் தெற்கு நோக்கியும், யாகசாலை மேற்கு நோக்கியும் காணப்படுகிறது.

**அம்பிகையின் அழகு:**

கோபுரம் அருகேயுள்ள கண்டாமணியின் ஓசை பலமாகக் கேட்கிறது. மங்கள வாத்தியங்கள் முழங்குகின்றன. வசந்தமண்டபத் திரை விலகித் தீபாராதனைகள் ஆரம்பமாகின்றன. நாம் காத்திருந்த வேளையும் வந்தது. அம்பிகையின் அருட்கோலம் கண்முன்னே தெரிகிறது. ஆஹா! அற்புதக் காட்சி! ஆனந்த தரிசனம். வெளியே பறைமேளச் சத்தம்; உள்ளே நாதஸ்வர ஓசை; அம்மா! அம்மா! தாயே! என அடியார்கள் எழுப்பும் குரலோசை; அனைத்தும் சேர்ந்து மேனி சிலிர்க்கும் ஒரு பரவசச் சூழ்நிலை.

உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்கள்வரை அழகே உருவானவள் எங்கள் அம்பிகை. பச்சைக்கரை வைத்த மஞ்சள் சேலையில் அழகு ரூபினி யாக அமர்ந்திருந்தாள் எங்கள் தாய். குறைந்த பூ மாலைகள். ஆனால் நிறைந்த தங்க நகை அலங்காரத்துடன் காட்சி தந்தாள் அந்த அலங்காரி. அந்த நாள் முதல் இந்த நாள்வரை ஊரின் மகிப் பெரிய பணக்காரி அல்லவா இவள்! அந்த பூரிப்பும் பொலிவும் கறுப்புப் பொட்டிட்ட கன்னத்தில் தெரிகிறது. வசந்த மண்டபத்திலிருந்து வீதி உலா வருவதற்கு புறப்படுகிறாள் அம்பிகை. அம்பிகைக்கு முன்னும் பின்னுமாகச் செல்கின்ற பக்தர் கூட்டத்துடன் நாமும் சேர்ந்து கொள்கிறோம்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் அவதாரங்கள், அற்புதங்கள், அனுக்கிரகங்கள்

கூட்டும் சக்தி பிரிக்கும் சக்தி ஆகிய இரண்டு சக்திகளின் சேர்க்கையால்தான் எமது அன்றாட வாழ்வின் அரிய பெரிய நோக்கங்களெல்லாம் நிறைவேறுகின்றன. அந்த சக்தியை அன்னைவடிவிலே அம்பிகை வடிவிலே கண்டவர்கள் நாம். ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றுமில்லா அந்த அளப்பெரும் சக்திக்கு ஆயிரம் திருநாமம் சூட்டி அழகான திருக்கோயில்கள் அமைத்து வழிபடுகிறோம். அம்பிகைக்கு மஹேஸ்வரி, மஹாகாளி, மஹாலக்சுமி, மஹாசரஸ்வதி என நான்கு மஹா ரூபங்களைக் கொடுத்து நான்கு மஹா நாமங்களைச் சூட்டியுள்ளோம். இவற்றைவிட சக்திக்கு அறுபத்துநான்கு சக்தி பீடங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சக்தி வழிபாடு மிகத் தொன்மையானதுடன் சக்தி வழிபாட்டுக்குச் சிறந்த இடங்களாக காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி போன்ற இந்திய திருத்தலங்களையும், ஈழத்தின் வடபாகத்திலுள்ள நயினை நாகபூஷணியையும் குறிப்பிடுவர். அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடமாய் நயினாதீவு விளங்குகிறது.

பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி,
புராந்தகி, த்ரியம்பகி, யெழிற்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, சகஸ்ரதள
புட்பமிசை வீற்றி ருக்கும்
நாரணி, மனாதீத நாயகி, குணாதீத
நாதாந்த சக்தி, என்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்க வசமோ?
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே! பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை அரசே!
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெண்! உமையே!

என்று இவ்வாறு சிவத்துக்கும், சக்திக்கும் பேதமின்மையால்தான் தாயுமான சுவாமிகளும் பூரணி, புராதனி, புராந்தகி என முதல்வனான சிவத்தின் திருநாமங்களை முதல்வியான சக்திக்கும் உரியனவாக வழங்கித் துதிசெய்துள்ளார்.

"அருளது சக்தியாகும் அரன்தனக்கு அருளை யின்றித்
தெருள் சிவம் இல்லை, அந்தச் சிவமின்றிச் சக்தி இல்லை" எனவும்
"எத்திறம் நின்றா னீசன் அத்திறம் அவளும் நிற்பன்" எனவும்

சிவஞான சித்தியாரிற் கூறியிருப்பதனை நோக்கினால் சிவனுக்கும் சக்திக்கும் பேதமின்மையென்பது புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரில் மணமும் போல, எள்ளில் எண்ணெயும் போல நீரில் குளிர்ச்சியும் போல, அக்கினியிற் சூடும்போல, பாலில் வெண்மையும் போல இறைவன் சிவசக்தியாய்த் திகழ்கின்றார். சிவம்வேறு சக்தி வேறு அல்ல. பாலில் வெண்மை நிறமிருக்கிறது. எவ்வாறு பாலில் உள்ள வெண்மை நிறத்தைப் பிரிக்கமுடியாதோ அவ்வாறே சிவத்தினின்றும் சக்தியைப் பிரிக்க முடியாது. சிவனைப் பிரியாது சக்தியே இறைவன் செயலையும் இயக்குகிறார்.

சிவமெ னும்பொருளு மாதி சத்தியொடு
சேரினெத் தொழிலும் வல்லதா
மிவள்பி ரிந்திடி னியங்கு தற்குமரி
தரிதெ னாமறை யிரைக்குமா
னவபெரும் புவன மெவ்வ கைத்தொழி
னடத்தி யாவரும் வழுத்துதா
ளவனி யின்கணொரு தவமி லார்பணிய
லாவ தோபரவ லாவதோ.

என்று கவிராஜ பண்டிதர் அவர்கள் சௌந்தர்ய லஹரியிற் குறிப்பிட்டதற்கமைய சிவமென்று சொல்லப்படும் மெய்ப்பொருளும் ஆதி சக்தியோடு சேரில் எத்தொழிலையும் நடத்தமுடியும். இச்சக்தி பிரிந்திடில் அப்பொருள் அசைதற்கும் அரியது அரியது எனவும் குறிப்பிடுகின்றார். சிவபெருமானைப் பிரியாது இறைவன் செய்யும் சகல செயல்களையும் இயக்கும் சக்தியாகிய உமாதேவியாரின் சரிதசாகரம், பராக்கிரமம் அளவிடற்கரியது. தேவியானவள் அடியார்களுக்கு அவ்வப்போது ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தையும் களைந்து அருளிய சரிதங்களில் ஒருசில வருமாறு :-

## (1) சாமுண்டி உற்பவம் (தோற்றம்)

இரணியகசிபன் மரபில் உதித்த நிசும்பன், சும்பன் என்னும் அசுரர் இருவர் கடுந்தவம் மேற்கொண்டு பெற்றுக்கொண்ட பேராற்றலினால் தேவர்களுக்கு இன்னல்கள் பலவற்றைச் செய்யலானார்கள். இவர்கள் இருவரினதும் கொடுமைகளைப் பொறுத்துக்கொள்ள முடியாத தேவர்கள் இமயவல்லியாகிய இறைவியை நோக்கி பெருந்தவஞ் செய்து தமக்குற்ற இடுக்கண்களை நீக்கும்படியும் சும்ப நிசும்பரிருவரையும் சங்கரிக்கும்படியும் விண்ணப்பித்தனர். தேவர்களின் வேண்டுகோளை ஏற்ற இறைவியானவர் அவர்கள் முன்னே தோன்றி உங்கள் வேண்டுகோளை ஏற்று அங்ஙனமே செய்வேன் என்றருளி மலைச்சாரலையடைந்து தவவடிவமேற்று தமது தோழியர்களுடன் தங்கியிருக்கையில் சும்ப நிசும்பர்களின் நண்பர்களாகிய சண்டன், முண்டன் என்னும் அசுரர் இருவர் தவம் மேற்கொண்டிருந்த உமாதேவியாரின் பேரழகைக் கண்டு மனமயங்கி இத்தகைய அழகுடைய மங்கையை திரிலோகங்களில் எங்கும் கண்டிலோம். இப்பேரழகுடையாள் தவஞ்செய்வானேன்? வனத்தில் வசிப்பானேன்? இவளுக்கு நல்வினை நாமேயளித்துச் செல்வத்தில் சிறக்க விளங்கும் பதவியைக் கொடுப்போம் என்று கருதி தேவியின் சமீபமாகச் சென்று பெண்ணே! உனது சரீரகாந்தி எங்கள் மனதைக் கவர்ந்து உனக்கு நன்மை செய்யுமாறு தூண்டுகிறது. அதனை நீ மறுத்துரைக்காமல் அங்கீகரித்தால் எதுவித குறையுமின்றி நீ வாழலாம். என்றும் சர்வ வல்லமை பொருந்திய சும்பனிடம் சென்றால் அவன் உன்னை அங்கீகரிப்பான் எனக் கூறலானார்கள். இதனைக் கேட்ட தேவி அருந்தவமியற்றும் யான் ஆடவர்களுடன் உரையாடவும் மாட்டேன். அவர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவும் மாட்டேன். என்று கூறி அவர்களை இவ்விடத்தை விட்டு அகன்று செல்லும்படி உரைத்தனர். இதனைச் செவிமடுத்த சண்டமுண்டர் சும்பனிடம் விரைந்து சென்று தேவியின் சிறந்த பொலிவை வியந்துகூறி சும்பன் கட்டளையால் சில படைகளோடு தேவி தவஞ் செய்து கொண்டிருக்கும் இடம் சென்று அழைத்தும் தேவி வராமையால் வலிதில் கைப்பற்றிக் கொண்டு செல்லக் கருதுகையில் அக்கணமே தேவியின் தோளிலிருந்து அனேகஞ் சேனையும் ஒரு சக்தியும் தோன்றி பெரும்போர் செய்து அசுரச் சேனையையும் சண்டமுண்டர்களையும் சங்கரித்தனர். தேவி அச்சக்தியை நோக்கி சண்டனையும் முண்டனையும் சங்கரித்தமையால் "சாமுண்டி" எனப் பெயர் பெற்று வாழ்க என வாழ்த்தியருளினார்.

சண்டமுண்டர்கள் இறந்த செய்தியைக் கேட்ட சும்ப நிசும்பரிருவரும் அனேக அசுரச்சேனையோடு சென்று சமுத்திரம் போல ஆர்ப்பரித்தும் இடிபோலக் கர்ச்சித்தும் தேவியை எதிர்த்து அஸ்திரமாரி பொழிந்தனர். இவற்றைக் கண்ணுற்ற தேவியார் தமது திருமேனியிலிருந்தும் அபிராமி, மாயேஸ்வரி, கௌமாரி, நாராயணி, வராகி, உருக்கிராணி, காளி என்னும் சப்த மாதர்களையும் சில சிவதூதியரையும் உதிப்பித்து சும்ப நிசும்பருடன் யுத்தத்திற்கு அனுப்பினர். சும்ப நிசும்பரது சேனைகள் புறமுதுகு காட்டி ஓடாதவண்ணம் தேவியால் அழிக்கப்பட்டதைக் கண்ட மாபாவிகளாகிய சும்ப நிசும்பர் தமது மாயா வல்லபத்தினால் மறைந்து கொள்ளத் துணிகையில் தேவியே அவ்விருவரையும் ஓடவிடாது நிறுத்தி எண்ணிறைந்த அஸ்திரங்களால் அவர்களது உடலைத் துளைத்து முதலில் நிசும்பனையும் பின்னர் சும்பனையும் அழித்து தேவர்களது துயரை ஒழித்தனர்.

## (2) காளி அல்லது சண்டி உற்பவம் :-

சும்பநிசும்பர் ஆகிய அசுரர்களுக்கு இளையவளாகிய குரோதி என்பவள் பெற்ற புத்திரனும் கொடியோனுமாகியவன் இரத்த பீஜன் என்பவன். இந்த இரத்தபீஜன் என்பவன் தனது உதிரத்தில் ஒரு துளியேனும் எக்காலத்திலும், எவராலாயினும், எக்காரணத் தினாலாயினும் தரைமேல் விழுந்தால் அப்படித் தரையில் விழுந்த ஒவ்வொரு துளி உதிரமும் தன்னைப்போல் உயிரேற்று தனக்கு உதவிசெய்யும் படியான வரத்தைப் பெற்றமையால் "இரத்த பீஜன்" என்னும் காரணப் பெயரைப் பெற்றுக் கொண்டவன். சும்ப நிசும்பன் ஆகிய இருவரும் சங்கரிக்கப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற இவன் தனது மாமன்மாரைக் கொன்று தீதிழைத்தவள் ஒரு பெண் என்று நாணமுற்று அத்தகைய நங்கையை சங்கரிப்பேன் என்று பெரும் அட்டகாசத்துடன் தேவியின் அருகில் சென்று போருக்கு அறைகூவ இதனைச் சமர்க்களத்திலிருந்த சப்தமாதர் கண்டு தேவியின் கட்டளையை சிரமேற்கொண்டு எண்ணற்ற அஸ்திரங்களால் அவனது உடலை சல்லடைக் கண்களாகத் துளைத்தனர். இக் காயங்களிளெல்லாம் இருந்து பெருகிய ஒவ்வோர் இரத்தத் துளியினின்றும் ஒவ்வோர் அசுரவடிவம் தோன்றி தனித்தனியே எதிர்பதைக் கண்ட சப்தமாதர்கள் விரைந்து ஓடிவந்து அம்பிகையின் பாதங்களில் வீழ்ந்து விண்ணப்பித்தனர். உமாதேவியார் புன்னகையுடன் தனது தோள்களை நோக்க அங்கு காளி தோன்றினார். தேவியார் சப்தமாதர்களை நோக்கி அவ்விடத்தில் நிற்கும்படி பணித்துவிட்டு காளியிடம் இந்த சப்தமாதர்கள் இரத்த பீஜனுடன் போர் செய்ய இயலாது திரும்பியமையால் யானே போரிட்டு அவனைக் கொல்லுவேன். அவன் இறக்கும்வரை அவன் உடலிருந்தும் ஒருதுளி இரத்தமாவது நிலத்திலே விழாது இருக்கும் வண்ணம் உனது கைக் கபாலத்தில் ஏந்தியும் உனது நாவினை வளைத்தும் பருகக்கடவாய் என்று பணித்தார். தேவியானவள் இரத்த பீஜனுடன் போர் செய்துவர காளிதேவியும் அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது உடலில் இருந்து வெளிவரும் இரத்தத்தை குடித்துவர இரத்தபீஜன் அழிக்கப்பட்டான். தேவர் துயர் ஒழிந்தனர். இறைவியார் காளிதேவியைக் களிப்பித்து "சண்டி" யென்னும் பெயரும் தெய்வீகமும், சிவனுடன் நடனஞ் செய்து அவர் பக்கலில் வசித்தலும் ஆகிய வரங்களை அளித்து சப்த மாதர்களுக்கு அனுக்கிரகித்து மறைந்தருளினார். இக்காளி தேவியே திருவாலங்காட்டிலிருந்து நிர்த்தப் போர் செய்தவராவார்.

## (3) துர்க்கை உற்பவம் :-

இந்திராதி தேவர்களையெல்லாம் அவர்களது பதவியிலிருந்து துரத்தியதோடு அல்லாமல் பூமியில் தர்மம் அழியும்படி கொடுங்கோலாட்சி செய்துவந்த துர்க்கனென்னும் அசுர அரசனுக்குத் தேவர்களெல்லோரும் பயந்து அவனது கட்டளைக்குப் பணிந்து நடக்கலானார்கள். இதனை அறிந்த பிரம்மதேவரும் விஷ்ணு மூர்த்தியும் இத்துயரங்களில் இருந்து தேவர்களை விடுவிக்கக் கருதி பார்வதி பரமேஸ்வரனைப் பணிந்து தங்கள் குறையைக் கூறினர். தேவியார் தேவர்களை நோக்கி கொடியோனான துர்க்கனைக் கொன்று உங்கள் துயரைப் போக்குவோம் என்று கூறி காளராத்திரி என்னும் சக்தியை நோக்கியவுடனே அச்சக்தி பணிந்துநிற்க நீ துர்க்கனிடம் சென்று இந்திராதி தேவர்களிடமிருந்து பறித்தெடுத்த பதவிகளை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப் போகின்றாயா அல்லது யுத்தம் செய்து இறக்கப் போகின்றாயா என்று கேட்டு அவன் கருத்தையறிந்து வரும்படி பணித்தனர். காளராத்திரி அக்கட்டளையை சிரமேற்கொண்டு துர்க்கனது நகரையடைந்து அவன் கொலுவிருக்கும் ராஜசபை சென்று அவனை நோக்கி இந்திராதி தேவர்களது செல்வங்களையெல்லாம் கொடுக்கப்போகின்றாயா அல்லது போரிட்டு இறக்கப் போகின்றாயா? உன் கருத்தென்ன என்று வினவவும் காளராத்திரியின் கட்டழகைக் கண்டு மயங்கிய துர்க்கன் அவளைப் பிடியுங்கள் என்று அசுரர்களிடம் கட்டளையிட்டான். அசுரர்கள் காளராத்திரியைப் பிடிக்கத் தொடர்ந்து செல்லுகையில் காளராத்திரி மன்னனை நோக்கி தூதாக வந்த மாதரை வசப்படுத்தல் உனக்கு அழகாகுமா? உமாதேவியார் பால் உள்ள சூலப்படை உன் மாமிசத்தைப் புசிக்கும் எனக் கூறிக்கொண்டு தன்னைத் தொடர்ந்து வந்த அசுரர்களைச் சிவந்து நோக்க கணப்பொழுதிலே அவ்வசுரர் கூட்டம் சாம்பரானது. இதனைக் கண்ணுற்ற துர்க்கன் கோபங்கொண்டு சுரேந்திரதபனன், யாக சத்துரு, மிருகாக்கன் தேவகம்பன், உரோமன் முதலிய அசுரத் தலைவர்களை ஏவ அவ்வசுரத் தலைவர்கள் பெருஞ்சேனையோடு காளராத்திரியைச் சூழ்ந்து கொண்டனர். காளராத்திரி கடும்சினம் கொண்டு வெளியிட்ட சுவாசவேகத்தால் அசுரப்படை எட்டுத் திக்குகளுக்கும் சிதறியோடி குப்புற வீழ்ந்தனர்.

இதனைக் கண்ணுற்ற துர்க்கன் வடவாமுகாக்கினி போலக் கொதித்தெழுந்து ரஜ கததுரக பதாதிகளாகிய தனது கணக்கில்லாத சேனைகள் முழுவதையும் சேர்த்துக்கொண்டு யுத்தத்திற்குப் புறப்பட்டான். இதனைக் கண்ணுற்ற காளராத்திரி மின்னற் கொடிபோன்று ஆகாய மார்க்கமாகச் சென்று உமாதேவியின் சந்நிதியையடைந்து துர்க்கன் பெருஞ் சேனையோடு போர்க்கோலங் கொண்டுள்ளான் என்று கூறி நமஸ்கரித்தாள். இதனைக் கேட்ட அம்பிகை அவ்வரசன் முன்னே தோன்ற இழிகுலத்தினனான துர்க்கன் சேனைத்தலைவர்களை நோக்கி இவளைத் தந்திரத்தினாலாவது வீரத்தினாலாவது கொண்டு வருவீர்களாயின் உங்களுக்குத் தேவர்களின் செல்வமெல்லாவற்றையும் கொடுப்பேன் என்று சொன்னான். உடனே அவனது சேனைத்தலைவர்கள் தமது சேனாசமுத்திரத்துடன் சென்றதும் தேவியார் தமது திருமேனியிலிருந்து பலகோடி சக்திகளைப் படைத்து போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும்படி விடுத்தனர். அச்சக்திகள் அசுரச் சேனையை அழித்து வெற்றிமாலை சூடிக்கொள்ள துர்க்கன் தனது சேனைகள் அழிவதைக் கண்டு தானே தேரிலேறி தேவியை எதிர்த்துப் பல அஸ்திரங்களை ஏவினான். தேவி அந்த அஸ்திரங்களையெல்லாம் திருப்பிவிட்டு அவனது ஆயுதங்களெல்லாவற்றையும் அழிக்க துர்க்கன் தனது வெற்றிவேலை விடுத்தனன். தேவி அந்த வெற்றிவேலைத் தனது வாளினாலே வெட்ட துர்க்கன் தனது சூலத்தை ஏவினான். தேவி அந்தச் சூலத்தையும் தனது கதையால் சிதைத்தாள். துர்க்கன் ஏவிய அனைத்து ஆயுதங்களும் தேவியால் அழிக்கப்பட துர்க்கனும் நிலத்திலே வீழ்ந்து மூர்ச்சையானான். இச்சந்தர்ப்பத்தில் அம்பிகை அனுப்பிய சக்தியானது துர்க்கனது சேனை முழுவதையும் அழித்தது. வெகு நேரங்கழித்து மூர்ச்சை தெளிந்து எழுந்த துர்க்கன் தனது சேனைகள் முழுவதும் அழிந்தது கண்டு இனிப் போர் செய்வது அசாத்தியமென்று பயந்து ஆகாயத்தில் ஒழித்து பாணங்களை விட அம்பிகை அக்கினிமுக பாணங்களால் அவற்றை விலக்கினார். துர்க்கன் யானை வடிவெடுத்து எதிர்கொள்ள அம்பிகை அதன் துதிக்கையை வாளால் வெட்டினார். இறுதியில் எருமைக்கடா வடிவமேற்று எதிரேவர அம்பிகை சூலாயுதத்தைச் செலுத்தி அதனை அழித்தனள். உடனே அக்கொடியோன் ஆயிரம் சிரமும் ஆயிரம் ஆயுதம் ஏந்திய ஆயிரம் கரங்கொண்டு அன்னையை எதிர்க்க அன்னையார் அஸ்திரமொன்றினாலே அவனுயிரை அழித்தனர். துர்க்கனைச் சங்கரித்த காரணத்தினாலே தேவிக்கு துர்க்கை என்றொரு திருநாமம் எய்தியது.

மேலே குறிப்பிட்ட சாமுண்டி, காளி அல்லது சண்டி, துர்க்கை என்பன போன்ற உமாதேவியாரின் அம்சங்கள், நாமரூபங்கள் தவிர பராசக்தி (மேலான சக்தி) மகேஸ்வரி (ஐஸ்வரியமுடையவள்) மஹிடவாஹினி (எருமைக்கடா வாகனத்தையுடையவள்) வித்தையின் வடிவெடுக்கும் போது சரஸ்வதி, தனதானிய வடிவெடுக்கும்போது இலட்சுமி எனவும் அம்பிகை அழைக்கப்படுகின்றாள். திருக்கடவூரில் வாழ்ந்த அபிராமிப்பட்டர் அன்னையை அகிமாலினி அண்டமெல்லாம் பூத்தவள், ஆத்தாள், கலாவயிரவி, மண்டலி, சாம்பவி, சுந்தரி, திரிபுரசுந்தரி, நாராயணி, பைரவி, பூங்குழலாள், மனோன்மணி, மாதங்கி, முக்கண்ணி, வராஹி போன்று இன்னும் பல திருநாமங்களைக் கொண்டும் தனது அபிராமி அந்தாதியில் போற்றிப் பாடியுள்ளார்.

இத்துணை அம்சங்கள் நாமரூபங்களைக் கொண்ட அம்பிகையை காஸ்மீரத்தில் அம்பாள் எனவும், குஜராத்தில் கல்யாணி எனவும், வங்கத்தில் காளி எனவும், மைசூரில் சாமுண்டி எனவும், மலையாளத்தில் பகவதி எனவும், ஈழத்தில் வீரமாகாளி, காமாட்சி, துர்க்கை எனவும் வழிபாடு செய்கின்றனர். இன்றைய தினம் தேரேறி வரும் வல்வை மக்களின் காவல் தெய்வமான எம் அன்னை "முத்துமாரி" என அழைக்கப்படுகின்றாள். எம் முத்துமாரித்தாயார் தேர் ஏறிவரும் காட்சியைத் தரிசித்து அவள் அருளைப் பெறுவோமாக.

**பா. மீனாட்சிசுந்தரம்**
(சமாதான நீதவான்)

இறைவன் அருளை மட்டும் அள்ளிவழங்குவார் என்பதற்கப்பால், தர்மத்தையும், சாதுக்களையும் காப்பதற்காக துஷ்டசங்காரம் நிகழ்த்த வேண்டிய கட்டாய நிலையிலும் என்றுமுள்ளார். காளி, பத்திரகாளி, துர்க்கையாகிய அகோர தேவிமுகூர்த்த அவதாரமெல்லாம் சகல படைக் கலங்களையும் தாங்கிநிற்பதும் இதன்பிரகாரமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30-03-2010 வலம்புரியில் வெளிவந்த தகவல்**

# வற்றாப்பளையில் தெய்வீக அதிசயம்!

## ஆளில்லா வீடுகளில் சலங்கை ஒலி! படையினரைத் துரத்தும் பாம்புகள்!!

இத்தகவல் இன்னுமோர் ஆலயம்பற்றியதாக இருந்தாலும், எங்கும் அன்னை, எங்கும் சக்திப்பிரவாகம் என்ற கோட்பாட்டுக்கமைய, எங்கள் சமய வளர்ச்சியையும் இறைநம்பிக்கை ஓங்கவேண்டும் என்பதனையும் கருத்தில் கொண்டு பிரசுரமாகிறது.

வன்னி அனர்த்தங்களினால் கடந்த ஓராண்டு காலமாக மக்கள் நடமாட்டமின்றியும் பூஜைகள் எதுவுமின்றியும் பூட்டப்பட்டிருந்த வற்றாப்பளை அம்பாள் ஆலயம், எங்கள் அன்னை நிகழ்த்திய அற்புதத்தினால் தற்போது ஆலயம் திறந்து பூஜைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

எனினும் முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் வற்றாப்பளைக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மட்டும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். முல்லைத் தீவின் கரைத்துறைபற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத் திற்கு உட்பட்ட வேறெந்த கிராமங்களைச் சேர்ந்த மக்களும் குடிய மர்த்தப்படாத நிலையில் வற்றாப்பளைக் கிராமத்தைச் சேர்ந்த மக்களின் குடியேற்றம் தொடர்பில் படையினர் கூடிய கவனம் செலுத்தியமை குறித்து அதிசயிக்கத்தக்க தகவல்கள் படையினரால் வெளியிடப்பட்டுள்ளன. இது பற்றித் தெரியவந்துள்ளதாவது,

அப்பகுதிக்கு மீளக்குடியமரச் சென்ற மக்களது ஓலைகளால் ஆன வீடுகள் அனைத்தும் எரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளன. "குறிப்பிட்ட வீடுகள் ஏன் எரிக்கப்பட்டன?" என அப்பகுதி மக்கள் இலங்கைப் படை யினரைக் கேட்டுள்ளனர்.

அற்குப் பதிலளித்துள்ள படையினர் ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் "சலங்கை ஒலிகள்" தினம் தினம் தொடர்ந்து கேட்டு வந்ததாலேயே தாம் வீடுகளுக்கு நெருப்பு வைத்ததாகத் தெரிவித்துள்ளனர். அனைத்து வீடு களுக்கும் தீ மூட்டியபோதிலும் ஓலை வீடுகள் மட்டுமே எரிந்தழிந்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இதேவேளை தமது படைத்துறை அதிகாரி ஒருவர் வற்றாப்பளை அம்மன் ஆலயப் பகுதிக்குச் சென்றபோது அவரை வெள்ளைநிற நாகபாம்பு ஒன்று கலைத்ததாகவும் அதிலிருந்து அவர் ஓடித்தப்பிச் சென்றதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று ஆலய வளாகத்தில் வைத்து படையினரை ஆறு தடவைகள் பாம்புகள் கலைத்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளை அடுத்து அந்தப் பகுதிக்குப் பொறுப் பான படை அதிகாரி அந்தப்பகுதி பிரதேச செயலர் ஊடாக வற்றாப்பளை அம்மன் ஆலய பூசாரியார் மற்றும் நிர்வாகத்தினரைத் தொடர்புகொண்டு ஆலயத்தனை பராமரிப்பது தொடர்பில் உடனடி நட வடிக்கைக்கு முற்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதன்பின்னர் முகாம்களிலும் முகாம்களில் இருந்து வெளியேறி உறவினர்களின் வீடுகளிலும் வாழ்ந்து வந்த மக்கள் வற்றாப்பளை கிராமத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். மக்கள் குடியமர்த்தப்பட்டதன் பின்னர் வற்றாப் பளைக் கிராம எல்லைக்குள் எந்த ஒரு படைமுகாமையும் வைத்திருப்பதை படையினர் தவிர்துள்ளதுடன் அந்தக் கிராமத்தில் மாட்டிறைச்சி விற்பதற்கும் தடை விதித்துள்ளனர்.

இதனை விடவும் கள்ளு உற்பத்திக்கும் அந்த கிராமத்தில் தடை விதிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. வற்றாப்பளை தவிர்ந்த அதன் அயற்கிராமங்கள் எவற்றிலும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வற்றாப்பளை அம்மன் அருளால் மேலைத்தேயர்கள் ஆலயத்திலிருந்து நந்திக்கடல் ஊடாக தலைதெறிக்க ஓடியதாக ஆலய வரலாறுகள் கூறுகின்றமை நினைவில் கொள்ளத்தக்கது. கடந்த ஆண்டு வைகாசி மாதம் நடைபெறவேண்டிய பொங்கல்நிகழ்வு போர் காரணமாக நடைபெற் றிருக்கவில்லை. இந்தநிலையில் நேற்று திங்கட்கிழமை "வளந்து நேர்தல்" எனப்படும் நிகழ்வு நடைபெற்றது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறகவே வடமராட்சி கிழக்குப்பகுதியில் நாகர்கோவில் கிராமத் தில் அமைந்துள்ள சரித்திர பிரசித்தி பெற்ற நாகதம்பிரான் ஆலயப்பகுதியில் முகாம் அமைத்துள்ள இராணுவத்தினரும் இதே அனுபவங்களை சந்திக்க நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு நிலைகொண்டிருந்த இராணு வத்தினர் காயவிட்டிருந்த சீருடைப் பைகளுக்குள் பாம்புகள் போயிருந்து அவர்களுக்கு இடையூறு விளைவித்ததாகவும் அதன் காரணமாகவே அங்கிருந்த இராணுவத்தினர் உடனடியாக அப்பகுதி உதவி அரசாங்க அதிபரை தொடர்புகொண்டு ஆலயத்தை திறந்து பூஜை வழிபாடுகள் நடைபெற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பணித்ததாகவும் தெரியவந்துள்ளது.

**நன்றி - வலம்புரி (30-03-2010)**

அன்பின் தத்துவமாம் ஆதிசிவன் கழுத்தில் நாகபாம்பு
ஆத்தாள் சக்தியும் நாகவடிவம், ஆறுதல் தருபவள் நாகதேவி
அற்புதம் புரிபவள் நாகபூசணி, அண்டமெங்கும் பூத்தவள் நாகராணி
அனந்த சயனனின் அறிதுயிலிற்கும் சர்ப்பம்தான் பஞ்சணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் அருட்கடாட்சம்

இப்புத்தகம் வெளியிடும் பணியை 2005ம் ஆண்டு ஆரம்பிக்கும்போது ஓரிரு வருடங்கள் செய்துவிட்டு நிறுத்திக்கொள்வோம் என்ற எண்ணமிருந்தது. புத்தகம் வெளியீடு செய்வதென்றால் எத்தனையோ படிக்கற்கள் தாண்ட வேண்டும். அதுவும் ஒவ்வொரு வருடமும் இலவசமாக வெளியிடுவதென்றால், அன்னை முத்துமாரியின் உத்தரவும், அருட்கடாட்சமுமே உந்துசக்தியாக இருக்கின்றது.

இவ் வெளியீட்டுப் பணிக்கு வருடம்தோறும் அன்னையின் தொண்டர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் ஆத்தாளே முன்னின்று பெற்றுத்தந்து கொண்டிருக்கிறார்.

உதாரணமாக அன்னையின் அழகுத் திருக்காட்சிப் படம் புத்தகத்தின் உட்பகுதியிலும் இடம்பெறவேண்டும் என்ற ஆர்வம் கடந்த வருடங்களாக இருந்துவந்தது. இவ்வருடம் புத்தக ஆக்கப்பணியில் ஈடுபட்டிருந்த வேளை எதிர்பாராத விதமாக ஓர் அன்பரை அன்னை சந்திக்கவைக்கிறார். அவ்வன்பரிடம் அவர்பற்றிய நிஜமான வாக்குகள் அன்னையின் அருளால் உரைத்துவிட்டு, எனது ஆர்வத்தை வெளிப்படுத்தினேன். இவ்வருடம் அவ்வன்பரும் ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் வருகிற வருடம் எவரிடமும் நிதி சேகரிக்காமல் தான்மட்டும் இப்பணியை முழுமையாகச் செய்கிறேன் என்றும் கூறி அன்னையின் பேரருளுக்கு ஆட்பட்டார். ஆத்தாள் எதை விரும்புகிறாவோ அதுவே நிறைவேறும்.

இதேபோல் ஓர் அச்சக உரிமையாளருக்கு அன்னையவள் மூலமாக வழங்கிய பேற்றினால் அவ்வன்பர் கடந்த மூன்று வருடங்கள் தொடர்ந்து அன்னையின் புத்தக அட்டைப்படத்தை வர்ணத்தில் அன்பளிப்பாக அச்சிட்டு உதவினார்.

இதேபோல் கடந்த வருடம் (2009) ஆற்றங்கரை வேலனுக்கும், ஐயனின் அற்புதங்களை வெளிக்கொணர்ந்து, எமது சமய வளர்ச்சி மேன்மையுற, நூல்வெளியீடு செய்யவேண்டுமென்ற விருப்பேறபட்டது. ஆகையால் அன்னைக்கு ஐந்து வருடங்கள் நூல் வெளியிட்டது போதும், கடந்த வருடத்துடன் இப்பணியை நிறுத்துவோம், இனி முருகன்பணியைச் செய்வோம் என்ற தீர்மானத்தில், அன்பிற்குரிய அப்பாண்ணாவைக் கொண்டு ஓர் அறிவித்தலை எழுதுவித்தேன். அப்பாண்ணா அவர்களும் “நிறுத்துவது” என்ற சொல்லைத் தவிர்த்து வேறு அன்பர்கள் இப்பணியைத் தொடர முன்வருமாறு என்ற கோரிக்கையை எழுதித்தந்தார். மறுநாள் அதிகாலை தியாணக் காட்சியில் அன்னையவள் 2010 க்கான புத்தக அட்டைப்படம் அமையவேண்டிய அமைப்புக்காட்சியைக் காட்டித் தொடர்ந்து செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ற அன்புக்கட்டளைக்கு உள்ளம் நெகிழ்ந்தது. பின் அவ் அறிவித்தலையும் பிரசுரிக்காமல் தவிர்த்துக்கொண்டேன்.

இதேபோல் 2008ம் ஆண்டு "அன்னையின் வரலாறு" விரிவாகப் பிரசுரமாயகிது. அவ்வருட கர்ப்பூரத்திருவிழாவிலன்று ஓர் அன்பர் இவ்வரலாறு விளக்கத்தில் ஏற்பட்ட ஒரு குறைபாட்டைச் சொல்லித் தர்க்கப்பட்டார். "வாற வருடத்திலிருந்து புத்தகம் வெளியிடுகிற, விநியோகிக்கிற கெட்டித்தனத்தைப் பார்ப்போம்" என்றார். மறுவருடம் 2009ம் ஆண்டு புத்தகம் விநியோக நேரத்தில் அவ்வன்பரும் சேர்ந்து புத்தகம் விநியோகித்தமை அன்னையின் அருளே.

2007ம் ஆண்டு அடியேன் மீது குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்ற வழக்குத் தொடரப்பட்டது. மாசிமாதம் 14ம் திகதியன்று, 2006ம் ஆண்டு வெளியிடப்பெற்ற புத்தகத்தகமொன்றுடன் அன்னையை நினைந்துருகி நீதிமன்றுக்குச் சென்றேன். இரண்டுவாரகால றிமாண்ட் விதிக்கப்பட்டு நண்பகலளவில் கைவிலங் கிடப்பட்டேன். மாரியாத்தாவை நினைந்துருகினேன். அந்திக்கிடையில் அன் னையின் அற்புதத்தால் அவ்விலங்கு கழற்றப்பட்டு விடுதலையாகினேன். இவ்வற்புத நிகழ்வை 2007ம், 2008ம் ஆண்டு புத்தகங்களில் முதற்பக்கத்தில் பாடலாக சுமதீஸ்வரன் வடித்துத்தர பிரசுரிக்கப்பெற்றது. அப்பாடல்,

**வேதங்கள் சூடி வேம்பில் வந்துதித்த வல்லை மாரியே!**
**வேரோடு சாய்க்க வினைவந்து சூழ்ந்து கைவிலங்கிட்ட போது,**
**அன்பினால் காதலித்து கரைந்தழுதேன்–காப்பது உன்கடனேயென்று**
**கருணையுடன் வெற்றிராணியென உதித்து அவ்விலங்கு தானுடைத்தாயம்மா**

இதன்பின் கடந்த இருவருடங்களாக நடந்த வழக்கு சென்ற வருட அன்னையின் கொடியேற்றத் தினத்தன்று தள்ளுபடியானது. பல சாட்சிகளும் பல பின்னணிகளும் உருவாக்கம் பெறமுனைந்தபோதும், இவ்வழக்கில் நீதியை நிலைநாட்டுவதற்காக அன்னைசக்தி பல அற்புதநிகழ்வுகளை நிகழ்த்தியிருக் கின்றா.

**ஆத்தாளைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்**
**பூத்தவளைப் போற்றிநின்றால் புதுமைதான் நித்தலும்**
**காத்திடுவாள் என்றும் கள்ளமற்ற அன்பர்களை**
**சேர்த்திடுவாள் தன் மலர்ப்பாதம் காட்டி**
**காய்த்திடுவாள் கொடுவினைகளையும் கொட்டங்களையும்**
**மாய்த்திடுவாள் மாயச் சாத்தான்களையும் – மாண்புமிகுதாயாவள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வெளியீடு சிறப்புற மனமுவந்து நிதியளித்தோர்

| | |
|---|---|
| **பத்மநிதி பிறேமச்சந்திரன்** காட்டுவளவு, வல்வெட்டித்துறை | 5000.00 |
| **செ. புஸ்பதாஸ்** பற்பைவளவு, வதிரி. | 5000.00 |
| **சிவகுமார் சுமன்** இலக்கண[illegible]ந்தை, உடுப்பிட்டி | 2000.00 |
| **ச. அழகேஸ்வரராசா** வல்வெட்டித்துறை | 2000.00 |
| **தங்கவேல் செந்தில்குமார்** நெடியகாடு, வல்வெட்டித்துறை | 2000.00 |
| **தவராசா – தங்கமலர்** பற்பைவளவு, வதிரி | 2000.00 |
| **நாகமுத்து ஆசிரியை** கம்பர்மலை | 2000.00 |
| **சுசீலா ஸ்ரீகணேசன்** (சுவிஸ்) வதிரி | 2000.00 |
| **செல்வி செல்வகௌரி** தும்பளை வீதி, பருத்தித்துறை | 2000.00 |
| **சுரேஸ்குமார்** ISP கொம்மியூனிகேசன் வித்தனை வீதி | 2000.00 |
| **சோமகுலசேகரம் வல்வெட்டித்துறை** | 2000.00 |
| **சீவரெத்தினம் வெதுப்பகம்** வல்வெட்டித்துறை | 1500.00 |
| **வெ. தயாபரன்** மயிலியதனை, வல்வெட்டித்துறை | 1500.00 |
| **ம. வெங்கடாசலபிள்ளை ஐயா** வல்வெட்டித்துறை | 1001.00 |
| **மு. சதீஸ்குமார்** நெடியகாடு, வல்வெட்டித்துறை | 1000.00 |
| **சி. செல்வராசா** அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை | 1000.00 |
| **இராமநாதபிள்ளை குழந்தைவடிவேல்** மயிலியதனை | 1000.00 |
| **கதிர்காமத்தம்பி விமலதாஸ்,** ஊரிக்காடு,வல்வெட்டித்துறை | 1000.00 |
| **ஓர் அன்பர்** | 1000.00 |
| **வைத்தியர் ச. சுப்பிரமணியசர்மா** (தெணியம்பை) | 1000.00 |
| **திரு. சு. தில்லைநடராசா குடும்பம்** (ஊரிக்காடு) | 500.00 |
| **திரு. லிங்கமூர்த்தி** (வல்வெட்டித்துறை) | 500.00 |
| **திரு. கி. சிவசோதி** கருணாநிதி சனசமூக நிலையம் வல்வெட்டி | 500.00 |
| **க. தங்கத்துரை** வல்வெட்டித்துறை | 500.00 |
| **பாலகுமார் ஆசிரியர்,** வதிரி | 500.00 |
| **அ. மனோகரன் ஆசிரியர்,** வல்வெட்டித்துறை | 300.00 |
| | 22700.00 |
| | 40801.00 |

*உண்மையே கடவுள்*

*எல்லா இடங்களிலும், எல்லா உயிர்களிடத்தும்*
*இறைவன் இருக்கின்றான்.*

*சுபம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேம்பெனவேய் நின்றிருப்பாய் கருமாரி – நாக
பாம்பெனவே மாறிடுவாய் மகமாயி
பொங்கல் வச்சோம் பொங்க வச்சோம் கருமாரி
பொங்க வைக்க பொங்க வைக்க வாதாயி!

# விஜி ஜுவல்ஸ்
# &
# ஜுவல் வேக்சொப்

சந்தை வீதி, உடுப்பிட்டி.

T.P: 0774896514

அம்மா தாயே வருவாயோ !
அருள் மழை நீயே பொழியாயோ ! ~ அம்மா....

சகலவிதமான ஆங்கில மருந்து வகைகள், பால்மா வகைகள்,
மற்றும் போட்டோ பிரதி, லெமனேற்றிங் செய்வதற்கும்
ஐஸ்கிறீம் வகைகளைப் பெற்றுக்கொள்வதற்குமான
மிகச் சிறந்த இடம்

T.P:
021 3216657

யாழ் கொழும்பு
சொகுசு பஸ் பதியுமிடம்

# ஆனந்தா மருந்தகம்

பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டும் இன்றும் என்றுமுள்ள தேவியே!
என்றும் உண்மையாக நடக்கின்றோம் உயர்வு தந்த தேவியே!

# நிரஞ்சன் நகைத் தொழிலகம்

நிர்மல வாசா, சந்தை வீதி, உடுப்பிட்டி.

T.P: 0778468324

# நிரஞ்சன் நகைமாடம்

வல்வெட்டித்துறை வீதி, T.P: 0778330085 உடுப்பிட்டி.

ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
விற்ற நகைகள் திரும்ப வாங்கும்போது கூலி, சேதாரம் கழித்து
மார்க்கட் விலைக்கு வாங்கப்படும்.

---

குழந்தை மனம் கொண்டவர்க்கு அன்புற்றான அன்னையே!
கொட்டமடிப்போரைக் குந்தவைக்கும் ஆங்காரியே!
தர்மத்தைக் காப்பதற்காய், நீதி நிலைபெறுவதற்காய்
அவனியில் நீ புரியும் லீலைகள் அப்பப்ப உணர்கின்றேன்
அன்னையே! எதுபலம் இருந்தாலும்
இறைபலம் வேண்டுமென்பது நிதர்சனமாச்சு கலியுகத்திலே!
அறம் பிழைத்தவர்க்கு அறமே கூற்றுவனாம் - இது நியதி.

↓

# சவன்ரிக்கி புடவையகம்

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

T.P:
0770761697


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org